
## திருவாரூர் அருகே கமுகக்குடி ஊராட்சியில் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் உறுப்பினர் சேர்க்கை

### மாவட்ட செயலாளர் பூண்டி கலைவாணன் எம்எல்ஏ துவக்கி வைத்தார்



திருவாரூர்,ஜூலை.04-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழர்களின் மொழி, மானம்,இனம் ஆகியவற்றை அழிக்க நினைக்கும் ஒன்றிய பாசிச பாஜக கட்சி எதிர்க் கொள்ளும் வகையில் கட்சி பாகுபாடு இன்றி அனைவரும் ஓரணியில் தமிழ்நாடு என்ற நோக்கில் கடந்த 1ம் தேதி ஓரணியில் தமிழ்நாடு என்ற திட்டத்தை துவங்கி வைத்தார். இதனையடுத்து நேற்று முதல் தமிழகம் முழுவதும் திமுகவினர் டிஜிட்டல் உறுப்பினர் சேர்க்கை துவங்கப்பட்டது. இதன் ஒருபகுதியாக திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் கமுகக்குடி ஊராட்சியில் மாவட்ட கழக செயலாளரும்,சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கலைவாணன் முதல் ஆளாக ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் சேர்ந்து அத்திட்டத்தை துவங்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் கொரடாச்சேரி ஒன்றிய கழக செயலாளர் பாலசந்தர்,சேகர் கலியபெருமாள்,பேரூர் கழக செயலாளர் கலைவேந்தன் மற்றும் அனைத்து பாகநிலை டிஜிட்டல் முகவர்கள்,தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள்,கழக தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கலைவாணன் செய்தியாளர்களிடம் பேசியதாவது,தமிழக முதல்வர் ஆணைகிணங்க தமிழர்களின் இனம்,மானம்,மொழி,கைமொழியை அழித்து தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய நிதியினை தராமல் தடுத்து நிறுத்தி தமிழ்நாட்டை அழித்துவிடலாம் என்று எண்ணும் பாசிச பாஜக அரசுக்கு எதிராக இந்த ஓரணியில் தமிழ்நாடு திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.நாங்கள் வீடு வீடாக சென்று பொதுமக்களிடம் திமுகவில் ஏற்கனவே உறுப்பினராக உள்ளீர்களா, தமிழக அரசின் நலத்திட்டங்கள் ஏதேனும் பெற்று உள்ளீர்களா,ஒன்றிய பாசிச பாஜக அரசை எதிர்க்க,தமிழ்நாட்டை பாதுகாக்க ஓரணியில் தமிழ்நாடு என்ற திட்டத்தில் சேர உள்ளீர்களா என்ற கேள்வி கேட்டோம் அதற்கு கொஞ்சம் கூட நேரம் எடுத்து கொள்ளாமல் மகளிர் உட்பட பலரும் ஆம் நாங்கள் தயாராக உள்ளோம் என்று சொல்லி உடனடியாக உறுப்பினர் சேர்க்கையில் தங்களை இணைத்து கொண்டனர்.இது தான் திராவிட மாடல் அரசுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்று மாவட்ட கழக செயலாளர் பூண்டி கலைவாணன் தெரிவித்தார்.

## அதிமுக என்ற கட்சியே இல்லாமல் ஆக்குவதே பாஜகவின் நோக்கம்

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேச்சு



அரியலூர்,ஜூலை.04-

அதிமுக என்ற கட்சியே இல்லாமல் ஆக்குவதே பாஜகவின் நோக்கம் என்றார் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர்.

அரியலூர் அண்ணாசிலை அருகே மாவட்ட திமுக சார்பில் புதன்கிழமை இரவு நடைபெற்ற ஓரணியில் தமிழ்நாடு பொதுக் கூட்டத்தில் அவர் பேசியது: ஓரணியில் தமிழ்நாடு பரப்புரைக்கான மையக் கருத்தாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சொல்லி இருப்பது மண்ணை காக்க, மொழியை காக்க, மானம் காக்க நாம் பாடுபட வேண்டும் என்பதற்காக. ஆகவே தான் நாம் அனைவரும் ஓரணியில் இணைய வேண்டும். தமிழகத்தில் 2 ஆம் இடத்தில் இருக்கின்ற அதிமுக,வை கபலி கரம் செய்து, அவர்களது தோளில் உட்கார்ந்துக் கொண்டு, உள்ளே வரத் துடிக்கிறது பாஜக. அப்படி நுழைந்துவிட்டால் ஒட்டு மொத்த அதிமுகவையும் அழித்துவிட்டு, 2 ஆம் இடத்துக்கு வந்துவிடலாம் என்ற நோக்கத்தில் பாஜக செயல்பட்டு கொண்டிருக்கிறது. அப்படி வர முடியாவிட்டால், தமிழகத்தையும் இரண்டு, மூன்று யூனியன் பிரதேசமாக பிரிப்பதற்கு துணிவார்கள். எந்த படுபாதக செயலுக்கும் அஞ்சாத ஒரு கூட்டம் தான் பாஜக இயக்கு கின்ற ஆர்.எஸ்.எஸ்.

எனவே தான் நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும் . அதற்காக தான் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஓரணியில் தமிழ்நாடு என்ற இயக்கத்தை தொடங்கியுள்ளார். இதை நாம் ஒவ்வொரு கிராமங்களிலும் திமுக அரசின் சாதனைகள் காலூன்றினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து கட்சியினர் மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும் .பாஜக உள்ளே நுழையாமல் தடுக்க வேண்டியது நம்முடைய கடமை அனைவரின் கடமை என்றார்.

கூட்டத்துக்கு, அக்கட்சியின் சட்ட திட்ட திருத்தக் குழு இணைச் செயலர் சுபா. சந்திரசேகர் தலைமை வகித்தார். தலைமைக் கழகப் பேச்சாளர் காவேரிப்பட்டினம் இளையராஜா கலந்து கொண்டு திமுக ஆட்சியில் செய்த சாதனைகளை எடுத்துக் கூறினார். ஜெயங்கொண்டம் சட்டப் பேரவை உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் பாலு ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர். கூட்டத்தில், நகரச் செயலர்கள் அரியலூர் இரா.முருகேசன், ஜெயங்கொண்டம் வெ.கொ.கருணாநிதி மற்றும் ஒன்றிய, நகர கிளை நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக மாவட்ட துணைச் செயலர் மு.கணேசன் வரவேற்றார். முடிவில் துணைச் செயலர் சி.சந்திரசேகரன் நன்றி கூறினார்.

## ஜி ஸ்கொயர் குழுமம் ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோயிலுக்கு பேட்டரி கார்கள் வழங்கியது



திருச்சி,ஜூலை.04-

ஜி ஸ்கொயர்குழுமத்தின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநரான பால ராமஜெயம். ஸ்ரீரங்கத்தில் உள்ள புகழ் பெற்ற ஸ்ரீரங்கநாத சுவாமி கோயிலுக்கு பேட்டரி மூலம் இயங்கும் இரண்டு கார்களையும், ஒரு பசு மற்றும் கன்றுக்குட்டியையும் அன்பளிப்பாக வழங்கினார். திருச்சியின் வரலாற்று சிறப்பு மிக்க, ஆன்மீக நகரமாகவும் இருக்கும் ஸ்ரீரங்கத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள பிரத்யேக பிரீமியம் வில்லா பிளாட் திட்டமான ஜி ஸ்கொயர் ஸென்-ஐ அறிமுகப்படுத்தும் தருணத்தில், ஜி ஸ்கொயர் குழுமத்தின் இந்த நன்கொடையானது, உணர்வுப்பூர்வமான ஒன்றாக அமைந்திருக்கிறது.

## திருவாரூர் மாவட்டத்தில் திருநங்கைகள் அடையாள அட்டையினை சான்றாக சமர்ப்பித்து பல்வேறு திட்டத்தில் பயன்பெறலாம்

### கலெக்டர் மோகனச்சந்திரன் தகவல்

திருவாரூர்,ஜூலை.04-

திருநங்கைகளின் நலவாழ்விற்கென நாட்டிற்கே முன்னோடியாக பல்வேறு புதுமையான திட்டங்கள் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்து வாழ்க்கையில் வெற்றிபெற உயர்கல்வி கற்பது இன்றியமையாததாகும். திருநங்கைகள் பாலின மாற்றத்தினால் குடும்பத்தை விட்டு வெளியேற்றப்படும் நிலையில் அவர்களும் சமூகத்துடன் ஒன்றிணைந்து வாழ்வாதாரத்தினை நடத்த வேண்டிய கட்டாயத்தின் காரணமாக பலர் கல்வியினை இடைநிற்றல் செய்ய நேர்கிறது என்றும், திருநங்கைகள் கல்வி உட்பட அனைத்து முயற்சிகளிலும் பாகுபாடு மற்றும் பல்வேறு தடைகளை எதிர்கொள்கின்றனர் என்றும், அவர்களில் ஒரு சிலர் மட்டுமே இத்தடைகளை தாண்டி கல்வி பயில முன் வருகின்றனர் என்றும், அவ்வாறு முன்வரும் திருநங்கைகளின் கல்வி கனவினை நிறைவேற்றுவதற்காக மற்றவர்களைப்போன்றே சமமான கல்வி வாய்ப்புகளை உறுதி செய்யும் பொறுப்பினை உணர்ந்து கல்வி கற்கும் சூழலுக்கு தேவையான மாற்றங்களை செய்தல் அவசியமாகிறது என்பதால் சமூகநலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு மாதம்தோறும் ரூபாய் ஆயிரம் உதவி தொகை வழங்கும் திட்டம் தற்போது திருநங்கைகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசால் உயர்கல்வி பயிலும் திருநங்கைகள் அனைவருக்கும் கல்விக்கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கட்டணங்களையும் அரசே ஏற்கும் என்று அறிவிப்பு செய்துள்ளதைத் தொடர்ந்து திருநங்கைகளின் உயர்கல்வியை உறுதிப்படுத்தும் விதமாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டம் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் திருநங்கை, திருநம்பி மற்றும் இடைப்பாலினர் உள்ளிட்ட அனைத்து திருநங்கைகளும் பயன்பெறும் வகையில் 6 முதல் 12-ம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும் என்பதை முழுவதுமாக தளர்வு செய்து தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினை சான்றாக சமர்ப்பித்து இத்திட்டத்தில் பயன்பெறலாம் என மாவட்ட கலெக்டர் மோகனச் சந்திரன் தெரிவித்துள்ளார்.


போக்குவரத்து விதிகளை மதிக்கவும்


## கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட 4 நகர நல வாழ்வு மையங்கள்

### முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்

கரூர்,ஜூலை.04-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக சென்னை, அடையாறு, சாஸ்திரி நகர், நகர்ப்புற நல வாழ்வு மையத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டவுள்ள 1 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அடிக்கல் நாட்டியும் மற்றும் ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4 நகர நல வாழ்வு மையங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக காணொலி காட்சி வாயிலாக (03.07.2025) திறந்து வைத்த நிகழ்ச்சியில், மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் V செந்தில் பாலாஜி கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் உள்ள பொது மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக, மருத்துவ உட்கட்டமைப்புகளை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம், கரூர் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட குளத்துப்பாளையத்தில் ரூ. 1.50 கோடி மதிப்பீட்டில் வி.வி.ஜி.நகர் வெங்கமேடு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அடிக்கல் நாட்டியும், அரிக்காரம்பாளையத்தில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் திருகாம்புலியூர் நகர நலவாழ்வு மையத்தினையும், பெரியகோதூரில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் வடிவேல் நகர் நகர நலவாழ்வு மையத்தினையும், திருக்காம்புலியூரில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் நந்தவனம் நகர நலவாழ்வு மையத்தினையும் மற்றும் சணப்பிரட்டியில் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர நலவாழ்வு மையங்களை திறந்து வைத்துள்ளார் என மொத்தம் ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் 5 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் நகர நல வாழ்வு மையங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டியும், திறந்து வைத்துள்ளார்கள். மருத்துவ சிகிச்சைக்காக வரும் பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் தரமான மருத்துவ சேவைகளை வழங்க வேண்டுமென மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதென மரியாதைக்குரிய கரூர் சட்டமன்ற உறுப்பினர் V செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் , கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் வெ. கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், மாநகராட்சி ஆணையர் கே.எம். சுதா, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. சுப்பிரமணி, மாநகர நல அலுவலர் மரு. கௌரிசரவணன், துணை மேயர் ப. சரவணன், மண்டலக் குழு தலைவர் சக்திவேல், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சி மாவட்டத்தில் 2 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 11 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்

### முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்



திருச்சி,ஜூலை.04-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, அடையாறு, சாஸ்திரி நகர், நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் (03.07.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற நலவாழ்வு மையங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்ததை தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், உறையூர் சோழராஜபுரம் நகர் நல மையத்தில் நடைபெற்ற விழா நிகழ்வில் கலெக்டர் வே.சரவணன் கலந்து கொண்டு, குத்துவிளக்கு ஏற்றி வைத்து, சுகாதார நிலையத்தை பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு சட்டப்பேரவையில் தேசிய நகர்ப்புற சுகாதாரக் குழுமத்தின் சார்பில் தலா ரூ.25 இலட்சம் மதிப்பில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என அறிவித்ததை தொடர்ந்து, முதற்கட்டமாக மாநகராட்சிப் பகுதிகளில் 311 நகர்ப்புற நலவாழ்வு மையங்களும் நகராட்சிப் பகுதிகளில் 189 நகர்ப்புற நலவாழ்வு மையங்களும் அமைக்கப்பட்டது. இதில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாநகராட்சிக்குபட்ட பகுதிகளில் 18 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 25 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக கடந்த ஜூன் 6ம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக (03.07.2025) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட பஞ்சப்பூர் மற்றும் அரியமங்கலம் ஆகிய 2 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும், துறையூர் மற்றும் மணப்பாறை நகராட்சிகளில் தலா 1 நலவாழ்வு மையமும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளுக்குட்பட்ட அம்பேத்கார் நகர், சஞ்சீவி நகர், வசந்த நகர், பாபுசெட்டி தெரு, அம்மன் நகர், சங்கிலியாண்டபுரம், ஸ்டார் நகர், கருமண்டபம் தெற்கு தெரு, அம்மையப்பநகர், சோழராஜபுரம், அரவானூர் மேலபாண்டமங்கலம் ஆகிய 11 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

ஒவ்வொரு நகர்ப்புற நல வாழ்வு மையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர் மற்றும் ஒரு துணை பணியாளர் ஆகியோர் மாவட்ட சுகாதார சங்கங்கள் மூலம் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த மையங் கள் காலை 8 மணி முதல் 12 மணி வரை யி லும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் செயல்படும். நகர்ப்புற நல் வாழ்வு மையங்களில் குழந் தை கள், கர்ப் பிணி பெண்க ஆகியோர் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். சளி, காய்ச்சல் போன்ற சிறு பிரச் ச னை களுக் கும் சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். மக்கள் குடியிருக்கும் இடத்திலேயே மருத் துவ சேவை வழங்கும் நோக்கத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் திருச்சி ராப் பள்ளி மாந க ராட்சி ஆணை யர் லி.மதுபாலன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஹேமசந்த் காந்தி, நகர்நல அலு வ லர் விஜய்சந்திரன், மண் ட லத் தலை வர் கள், மா ம ன் ற உறுப் பி னர் கள், மருத்து வர்கள் மற்றும் மருத் து வப் பணி யா ளர் கள், பொதுமக் கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ராசிபுரம் அரிமா சங்கம் சார்பில் 86 வயதுள்ள டாக்டர் ஆர்.எம்.கிருஷ்ணனுக்கு பாராட்டு

ராசிபுரம்,ஜூலை.04-

அரிமா டாக்டர் ஆர். எம்.கிருஷ்ணன், வயது 86. அவரின் மருத்துவ சேவைகளை பாராட்டி தலைவர் பெரியசாமி பொன்னாடை அணிவித்து கவுரவித்தார். டாக்டர் ஆர்.எம்.கிருஷ்ணன் முதன்முதலாக ஊட்டி, குன்னூர் அரசு மருத்துவமனையிலும், பிறகு ராசிபுரம் அரசு மருத்துவமனையிலும் பணியாற்றினார். தொடர்ந்து மருத்துவ சேவை செய்து வருகிறார். சேலம் மாவட்ட டாக்டர்கள் சங்கத் தலைவராகவும், தமிழ்நாடு இந்திய மருத்துவ சங்க மாநிலத் தலைவராகவும், நெறிமுறைக்குழு தலைவராகவும் பணியாற்றியுள்ளார். அரிமா இயக்கத்தில் தலைவராகவும், மாவட்ட தலைவராகவும் 30 ஆண்டுகள் சேவை புரிந்துள்ளார். 1999-ல் பூனா ஐ.எம்.ஏ மாநாட்டில் அகில இந்திய அளவில் சிறந்த மாநிலத் தலைவர் விருது பெற்றுள்ளார். 2012-ல் தமிழக அரசின் சிறந்த டாக்டர் விருதினையும், தங்க மெடல், ரூ.50,000-ம் பரிசுத் தொகையும் பெற்றுள்ளார். ராசிபுரம் ஸ்ரீ வித்யா மந்திர் பள்ளியினை 1979ல் தொடங்கி நிறுவனத் தலைவராக பணியாற்றி வருகிறார். இந்நிகழ்ச்சியில் இனியவன் இளங்கோ உள்பட பல அரிமாக்கள் அவரின் சேவையை பாராட்டி பொன்னாடை அணிவித்தனர். முடிவில் பொருளாளர் சிவக்குமார் நன்றி கூறினார்.


Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only


**உயர்திரு.உட்கோட்ட நிர்வாக நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகம், மன்னார்குடி**
**ந.க.எண். 62/2025**

கி.அஞ்சம்மாள்,
த/பெ. கிருஷ்ணசாமி,
1254, வடக்குத்தெரு,பள்ளிவர்த்தி,
மன்னார்குடிTk,திருவாரூர் மாவட்டம்
– மனுதாரர்
–எதிர்–
வட்டாட்சியர், மன்னார்குடி
– எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, பள்ளிவர்த்தி, பூதமங்கலம், வடக்குத்தெரு, கதவிலக்கம், 1/254, என்ற முகவரியில் வசித்து வருமு கிருஷ்ணசாமி மகளும், கோபால்சாமி மனைவியுமாகிய கி.அஞ்சம்மாள் ஆகிய எனது தாயார் திருமதி. தையல் ஆச்சி என்பவர் கடந்த 04.07.1995 ஆம் தேதி அன்று இறந்து விட்டார். மேற்படி எனது தாயாரின் இறப்பினை பதிவு செய்ய மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் சமூகம் முன்பாக மனுதாக்கல் செய்துள்ளேன். இது சம்மந்தமாக எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இன்றிலிருந்து இருவார தினங்களுக்குள் சமூகம் மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கி.அஞ்சம்மாள், த/பெ. கிருஷ்ணசாமி,
1254, வடக்குத்தெரு,பள்ளிவர்த்தி,
மன்னார்குடிTk,திருவாரூர் மாவட்டம்

**சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.**
**ஒ.மு.அ2/3050/2025**

கணேசன்,
த/பெ.N.P.ஆண்டியப்பன்,
2/61, மேலவிட்டு கட்டி,
சிந்தலவாடி கிராமம் மஜ்ரா,
கிருஷ்ணராயபுரம் தாலுகா,
கரூர் மாவட்டம்
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் தனது தங்கை “செல்வி” என்பவர் மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் கடந்த 14.03.2024 அன்று இறந்தார் என்று கூறி இறப்பு சான்று வேண்டி மனு செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 7 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்திடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

ஆ.கணேசன்,
மனுதாரர், கிருஷ்ணராயபுரம்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், முசிறி**
**சி.ப.எண்.1726/2025**

அமானுல்லா,
த/பெ.முகம்மது சரீப்,
க.எண்.1/403, முஸ்லீம் தெரு,
கோட்டப்பாளையம் (கிழக்கு)
துறையூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், தொட்டியம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை “முகம்மது சரீப்” என்பவர் கடந்த 13.08.1991–ம் தேதி அன்று கொளக்குடி முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

அமானுல்லா,
மனுதாரர், துறையூர்.

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், முசிறி**
**சி.ப.எண்.1724/2025**

அமானுல்லா,
த/பெ.முகம்மது சரீப்,
க.எண்.1/403, முஸ்லீம் தெரு,
கோட்டப்பாளையம் (கிழக்கு)
துறையூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
வட்டாட்சியர், தொட்டியம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தாயார் “சபியாபி” என்பவர் கடந்த 27.07.2003–ம் தேதி அன்று கொளக்குடி முகவரியில் உள்ள அவரது வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.

அமானுல்லா,
மனுதாரர், துறையூர்.

**திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**இ.ம.எண்.24/2019**
**அ.வ.எண்.122/2017**

செல்வராஜ்,
த/பெ.தியாகராஜ செட்டியார்,
ஐநூற்றி பிள்ளையார் கோவில்,
வடக்குத் தெரு, விஜயபுரம்,
திருவாரூர்.
– மனுதாரர்/வாதி
– எதிர் –
நூர்முகம்மது,
த/பெ.நைனா முகம்மது,
நம்பர்.1A/10E3, காந்திசாலை,
பைபாஸ் ரோடு, விஜயபுரம்,
திருவாரூர்.
– 13–ம் எதிர்மனுதாரர்/ 13–ம் பிரதிவாதி

பொது அறிவிப்பு

திருவாரூர், விஜயபுரம் வார்டு எண்.3, பிளாக் எண்.10 (புதிய பிளாக் எண்.30) T.S.No.479/7 (புதிய எண்.1073) மனை விஸ்தீரணம் 5230 சதுரடி புகல் கீழ்புறம் உள்ள சொத்தை பொறுத்து வாதி விளம்புகை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்களை பொறுத்து வழக்கு தாக்கல் செய்து விசாரணை நிலுவையில் உள்ளது. வழக்கில் பலமுறை 13–ம் எதிர்மனுதாரர்/13–ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பியும் சார்வு செய்யப்படவில்லை. அதனால் நாளிதழில் பொது அறிவிப்பு வெளியிட கோர்ட்டாரவர்களால் உத்தரவிடப்பட்டு எதிர்வரும் 10.07.2025–ம் தேதியன்று ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. அதனால் 13–ம் பிரதிவாதி மேற்படி வாய்தா தேதியில் காலை 10.30 மணிக்கு நேரடியாகவோ வழக்கறிஞர் மூலமாகவோ நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் தரப்பு கட்சியினை தெரிவித்துக் கொள்ளலாம் என்றும் தவறும்பட்சத்தில் வழக்கில் ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இந்த பொது அறிவிப்பு மூலமாக தெரிவிக்கப்படுகிறது.

R.சசிகுமார், B.A.,B.L.,.
வழக்கறிஞர், திருவாரூர்.


தமிழ்நாடு அரசு
நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை– பேரூராட்சிகளின் இயக்ககம்
**நன்னிலம் தேர்வுநிலை பேரூராட்சி, திருவாரூர் மாவட்டம்**
செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், நன்னிலம் – 610 105. E-mail: nannilamtp@gmail.com
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண்.274/2025/அ1 நாள்: 25.06.2025
பணிகள் விவரம்: இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டம் 2025-26
ஒப்பந்தப் புள்ளி மதிப்பு (ரூ. லட்சத்தில்): 61.00 | வைப்புத் தொகை ரூ: 61000/- | பணி முடிக்கும் காலம்: 6 மாதங்கள்
ஒப்பந்தப்புள்ளிகள் 16.07.2025 ... https://tntenders.gov.in ...
ப.ராஜசேகரன், பேரூராட்சி மன்ற தலைவர், நன்னிலம் தேர்வுநிலை பேரூராட்சி, திருவாரூர் மாவட்டம்.
செ.மக்.தொ.இ/ 3424 / ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு
**திருப்பூர் மாவட்டம் - பேரூராட்சிகள் நிர்வாகம் முத்தூர் பேரூராட்சி**
அயோத்தி தாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் (ITPHDS) 2025-2026
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண்: 166/2025 நாள்: 23.06.2025
அ) மின் ஒப்பந்தப்புள்ளி ... : 16.07.2025 மாலை 3.00 மணி
ஆ) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் ... : 16.07.2025 மாலை 3.30 மணி
செயல் அலுவலர், முத்தூர் பேரூராட்சி, திருப்பூர் மாவட்டம்.
செ.ம.தொ.இ/3386/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை
மங்களூர் ஊராட்சி ஒன்றியம்
மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
1 | Construction of New Building to Rural Primary Health Centre at Thozhuthur Panchayat | 15000000 | 150000 | 6 மாதம்
1 | மின் ஒப்பந்தப் புள்ளி ... | 25.07.2025 மாலை 4.00 மணி
2 | மின் ஒப்பந்தப்புள்ளி ... | 25.07.2025 மாலை 5.30 மணி
செமதொஇ/3380/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
(CFSIDS) 2025–2026
1 | ... | 11.07.2025 மாலை 3.00 மணி
2 | ... | 11.07.2025 மாலை 3.30 மணி
செமதொஇ/3379/ஒப்பந்தப்புள்ளி/2025

